

# 1997 ... 2012 ...

மாற்றம் வந்தது...
ஏற்றம் தந்தது...!

CATALYST PUBLIC RELATIONS PVT. LTD.

# மாற்றம் வந்தது...

நமது கேட்டலிஸ்ட் பப்ளிக் ரிலேஷன்ஸ் நிறுவனம், செய்தி பரப்பும் சேவையில் 16–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில், மடல் மூலம் உங்களோடு உரையாடுவதில் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

மக்கள் தொடர்புச் சேவையில் தமிழகத்தின் முதன்மை நிறுவனமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் நமது கேட்டலிஸ்ட் பப்ளிக் ரிலேஷன்ஸ் நிறுவனம், 1997–ல் மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டது. பெரிய இலக்கு எதுவும் இன்றி, சிறிய வட்டத்திற்குள் செயல்பட்டுக் கொண்டிருந்த நமது சிந்தனைப் போக்கை மாற்றியது, அப்போது நாம் படித்த இந்த 'நட்சத்திர மீன்' கதைதான்.

கடலில் எழும்பிய ராட்சத அலைகளின் காரணமாக நூற்றுக்கணக்கான நட்சத்திர மீன்கள் கரையில் ஒதுங்கின. கரையோரமாய் நின்று கொண்டிருந்த அந்தச் சிறுவன் குனிந்து, துடித்துக் கொண்டிருந்த நட்சத்திர மீன்களை, ஒவ்வொன்றாக எடுத்து கடலுக்குள் எறிந்து கொண்டே இருந்தான். அவனது முயற்சியால் ஒரு சில மீன்கள் உயிர் பிழைத்தன. ஆனாலும் மீண்டும் மீண்டும் பல புதிய நட்சத்திர மீன்கள் கரையில் ஒதுங்கிய வண்ணம் இருந்தன.

இதைத் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர், சிறுவனின் அருகில் வந்து, "சில மீன்களை மட்டும் நீ காப்பாற்றுவதால் உனக்குள் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது?" என்று கேட்டார்.

அந்தச் சிறுவனோ, கையில் ஒரு மீனை எடுத்து, "இதோ, இந்த மீனுக்கு என்னுடைய செய்கை, ஒரு மிகப் பெரிய மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும்" என்றவாறே அதைக் கடலுக்குள் வீசி, அதற்கு உயிரூட்டினான்.

தோழமையுடன்

ஆர். ஜாஸ்மின்

ஏ. ஹாலிதா

எல். சுப்பிரமணியன்

சி. ராஜசேகரன்

எம். லீலாவதி

என். அரசுமணி

சந்தோஷ் நாராயணன்

# ஏற்றம் தந்தது...!

ஆம் நண்பர்களே! ஒவ்வொரு முறையும் வணிகத்தை ஏற்கிறபோது, 'இதனால் நமக்கு என்ன லாபம் வரும்?' என்று எண்ணிக் கொண்டிருந்த நாம், இந்தக் கதையைப் படித்ததும் 'வாடிக்கையாளருக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்த முடியும்?' என்று சிந்திக்கத் தொடங்கினோம். அந்தச் சிந்தனை மாற்றமே பல புதிய வாடிக்கையாளர்களை நமக்குப் பெற்றுத் தந்தது.

அது மட்டுமல்லாது, சென்னை, புதுச்சேரி, கொச்சி, பெங்களூரு, ஐதராபாத், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, வேலூர், சேலம் என தென்னிந்தியா முழுவதும் செய்தி பரப்பும் சேவையை மேற்கொள்ளும் ஆற்றலையும், 400–க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றிய அனுபவத்தையும் பெற்று நாம் உயர உதவியது.

வளர்ந்தது நாம் என்றாலும், இந்த மாபெரும் வளர்ச்சிக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்ததென்னவோ வாடிக்கையாளர்களும், பத்திரிக்கை நண்பர்களும்தான். ஏணிப்படிகளாய் நீங்கள் இருந்து எம்மை உயரச் செய்ததால்தான், நம்மால் சிகரங்களைத் தொட முடிந்திருக்கிறது. உங்களின் ஆத்மார்த்தமான அன்பிற்காக எமது இதயங்கனிந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

நாம் அடைய வேண்டிய இலக்கு வெகு தூ....ரத்தில் இருக்கிறது. நமது பயணத்திற்குத் திசைகாட்டியாய் இருந்து, உற்சாகத்தை வாரி வழங்கி, நம் வெற்றியில் குதூகலம் அடைகிற உங்களைப் போன்றோர் உடனிருக்கையில், வானமும் நம் கைக்கு எட்டும் தூரம்தான்.

தொடர்கிறோம் நம் பயணத்தை... உங்கள் கைகளைப் பற்றியவாறே...!

தோழமையுடன்

இராம்குமார் சிங்காரம்
Director

இராம. வள்ளியம்மை
Director

கே. பி. அமர்நாத்

வி. ஸ்ரீவித்யா

வி. பால் பிரிட்டோ

என். கற்பகம்

பி. எபினேசர்